[24th July 1962

புதிய உல்லாச ஸ்தலங்கள்

*** 566 கேள்வி.—திரு. ஜே. மாதாகவுடர்** (திரு. புலவர் கா. கோவிந்தன் அவர்கள் சார்பாக) : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூரிலிருந்து நான்கு கல் தொலைவில் இருக்கும் ஊசூர் மலையை இன்ப உலாவுக்கு உரிய இடமாக ஆக்குவதற்காக அரசாங்கத்திடம் மானியம் கோரி வேலூர் நகராட்சி மன்றத்திடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இல்லை, ஐயா.

*** 567 கேள்வி—திரு. ஜே. மாதாகவுடர் :** (திரு. புலவர் கா. கோவிந்தன் அவர்கள் சார்பாக) : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், வெண்பாக்கம் யூனியன் எல்லைக்குள் பாலாற்றிற்கு அருகிலுள்ள சீமளம் என்ற சிற்றூரிலும் வேடந்தாங்கல் போலவே பல்வேறு வகைப்பட்ட பறவைகள் பெருங் கூட்ட மாக இருப்பதால் அந்த இடத்தையும் உல்லாச ஸ்தலமாக உத்தேச முண்டா ?

THE HON. SRI **N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :** No, Sir.

Backward areas (development)

* 568 *Q.*—SRI **M. KALYANASUNDARAM :** Will the Hon the Minister for Finance be pleased to state—

(*a*) the areas defined as " Backward Areas" in the State ; and

(*b*) the details of the special schemes for developing such areas ?

THE HON. SRI **M. BHAKTAVATSALAM :** (*a*) & (*b*) There has so far been no formal classification of any area in the State as backward. There are however certain areas in the districts which are comparatively less developed than others and the needs of these areas have been taken into account in the framing of Third Five Year Plan. Wherever possible, preference is being given in the annual plans to the implementation of the schemes benefiting the less developed areas.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார். கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்வியைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்று நினைக்கிறேன். பிளானிங் கமிஷன், ஒவ்வொரு ராஜ்யத்திலும் பின் தங்கியிருக்கக்கூடிய பகுதிகள் என்று வரையறுக்கப்பட்டவற்றை வளர்ச்சிக்குக் கொண்டுவர விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்ற கொள்கையை வகுத்திருக் கிறது. அந்த முறையில், நம்முடைய ராஜ்யத்தில் எந்தெந்தப் பகுதிகள் பின் தங்கியவை என்று வரையறுக்கப்பட்டு விசேஷ கவனம் செலுத்தப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வியில் " the areas defined as backward areas " என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஒன்றும், 'டெபனிஷன்' இல்லை என்று சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தப் பகுதிகள் பிற்போக்கான நிலையில் இருக் கின்றன என்பதைப் பரிசிலனை செய்துதான் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு மீ. கலியாணசுந்தரம் : ஒரு மாவட்டத்தில் மட்டுமல்ல, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள்கூட பின்தங்கிய பகுதி களாக இருக்கின்றன. புதுக்கோட்டை, கிழக்கு ராமநாதபுரம் போன்ற